**செய்தி வெளியீடு எண்: 508** **நாள்: 28.10.2016**

# செய்தி வெளியீடு

தமிழ் வளர்ச்சித் துறை சார்பில் ஆண்டுதோறும் மாவட்ட அளவில் 11, 12ஆம் வகுப்பு பயிலும் பள்ளி மாணவர்களுக்கு கவிதை, கட்டுரை, பேச்சுப் போட்டிகள் நடத்தி பரிசுகள் வழங்கப்பட்டு வருகின்றன. அவ்வகையில் இந்த ஆண்டு (2016–17) சென்னை மாவட்ட அளவில் 11, 12 ஆம் வகுப்பு பயிலும் பள்ளி மாணவர்களுக்கான கவிதை, கட்டுரை, பேச்சுப் போட்டிகள் 04.11.2016 ஆம் நாளன்று சென்னை, எழும்பூர், மாநில மகளிர் மேல்நிலைப்பள்ளியில் காலை 9.00 மணி முதல் நடைபெற உள்ளது.

ஒவ்வொரு போட்டிகளிலும் வெற்றிபெறும் மாணவர்களுக்கு முதல் பரிசாக ரூ.10,000/–மும், இரண்டாம் பரிசாக ரூ.7000/–மும், மூன்றாம் பரிசாக ரூ.5000/–மும், சான்றிதழும் வழங்கப்படும்.

போட்டிக்கான தலைப்புகள் போட்டி தொடங்கும்போது அறிவிக்கப்பெறும். போட்டி முடிவுகள் அன்றே அறிவிக்கப்பெறும். போட்டியில் கலந்துகொள்ளும் மாணவர்கள் பயிலும் பள்ளித் தலைமை ஆசிரியரிடம் உரிய படிவத்தில் பரிந்துரையுடன் பெற்று வரவேண்டும். போட்டி விதிமுறைகள், விண்ணப்பப் படிவம் www.tamilvalarchithurai.org என்ற வலைத்தளத்தில் பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்.

**வெளியீடு: – இயக்குநர்,** செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.